## குலசேகரபட்டினத்தில் 2 ஆண்டுகளில் ராக்கெட் ஏவுதளம்: இஸ்ரோ தலைவர் சோம்நாத் நம்பிக்கை


சோம்நாத் | கோப்புப் படம்

**மதுரை:** குலசேகரப்பட்டினம் ஏவுதளம் விரைவில் பணி முடிக்கப்பட்டு 2 ஆண்டுகளில் பயன்பாட்டுக்கு வரும் என இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்தார்.

ராமேசுவரம் செல்வதற்காக மதுரை வந்த இஸ்ரோ தலைவர் சோம்நாத் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: ஸ்பேஸ் ஷட்டில் 2 முறை சோதனை செய்யப்பட்டு விட்டது. ஒருமுறை கடலிலும், ஒருமுறை விமான ஓடுதள பாதையிலும் சோதனை செய்யப்பட்டது. இறுதிக்கட்ட சோதனை விண்வெளிக்கு அனுப்புவது தான்.

ஆதித்யா வரும் ஜனவரியில் எல் ஒன் சுற்றுப் பாதையை சென்றடையும். அதன் பிறகு அங்கு ஆய்வுகளை மேற்கொள்ளும். சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்திலிருந்து ஆய்வு பணிகளை மேற்கொள்ளும். குலசேகரபட்டினத்தில் தயாராகும் ஏவுகணை தளம் பொருளாதார ரீதியாக லாபகரமாக இருக்கும்.

ஸ்ரீ ஹரிகோட்டாவில் ஏவப்படும் சிறிய ராக்கெட்டுகள், இலங்கையை சுற்றிச் செல்ல வேண்டி இருக்கிறது. இதனால் அதிகசெலவு ஏற்படுகிறது. குலசேகரப்பட்டினத்தில் ஏவப்படும் விண்கலங்கள் நேரடியாக விண்வெளியை சென்றடையும். எஸ்.எல்.வி போன்ற சிறிய வகைராக்கெட்களுக்கு குலசேகரப்பட்டினம் ஏவுதளம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

நிலம் கையகப்படுத்தும் பணி ஏறத்தாழ நிறைவடைந்து விட்டது. சுற்றுச்சுவர் கட்டுவது உள்ளிட்ட பாதுகாப்பு பணிகள் முடிந்ததும் 2 ஆண்டுகளில் ஏவுகணை தளம் கட்டி முடிக்கப்படும். நூறாண்டுக்கு பிறகு பூமியை தாக்கவுள்ளதாக ஒரு விண்கல் குறித்து பல்வேறு தகவல்கள் வருகின்றன. அமெரிக்காவில் உள்ள டார்க் மிஷின் போன்று, நாமும் அதனை சோதனை செய்ய வேண்டும்.

அந்த விண்கல் அமெரிக்கா, ஆஸ்திரேலியா உட்பட எங்கு வேண்டுமானாலும் விழலாம். இது நமக்கு மட்டும் உண்டான பிரச்சினை அல்ல. உலக நாடுகள் அனைத்தும் இந்த விண்கல் குறித்து தகவல் சேகரிக்க வேண்டும். இது போன்ற தகவல்களை அறிய நமக்கு பலமான விண்வெளி தொழில் நுட்பம் அவசியம் என்று கூறினார்.

## ஜஎம் நார்ம்ஸ் செஸ் தொடர் சென்னையில் நாளை தொடக்கம்



**சென்னை:** தமிழகத்தில் இருந்து அதிக கிராண்ட் மாஸ்டர்களை உருவாக்கும் நடவடிக்கைகளை தமிழ்நாடு செஸ் சங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக முதலில் சர்வதேச மாஸ்டர்களை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு செஸ் சங்கம் சார்பில் ஐஎம் நார்ம்ஸ் தமிழ்நாடு க்ளோஸ்டு சர்க்யூட் செஸ் தொடரை நடத்த முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பான பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தமிழ்நாடு செஸ் சங்கத்தின் தலைவர் எம்.மாணிக்கம் கூறியதாவது: தமிழகத்தில் இருந்து அதிக அளவிலான சர்வதேச மாஸ்டர்களை உருவாக்கும் வகையில் ஆண்டுக்கு 50 செஸ் தொடர்கள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 10 தொடர்களை 16-ம் தேதி (நாளை) முதல் டிசம்பர் 22 வரை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். ஒவ்வொரு தொடரிலும் 5 வெளிநாட்டு வீரர்கள், 5 உள்நாட்டு வீரர்கள் கலந்துகொள்வார்கள். முதல் தொடர் சென்னையில் நடைபெறுகிறது. இதில் தமிழகத்தில் இருந்து ஹர்ஷத் (கோவை), அஷ்வத் (சென்னை), ஜா

சேஷாத்ரி (நெய்வேலி) ஆகியோரும் அகில இந்திய அளவில் கவுதம் கிருஷ்ணா (கேரளா), ஸ்ரீஹரி (புதுச்சேரி) ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

இவர்களுடன் அமெரிக்கா, கிர்கிஸ்தான், ரஷ்யா, அஜர்பைஜான், துர்க்மேனிஸ்தான், பிரான்ஸ் ஆகிய நாடுகளை சேர்ந்த வீரர், வீராங்கனைகளும் கலந்து கொண்டு விளையாட உள்ளனர். தற்போது தமிழகத்தை சேர்ந்த 39 பேர் சர்வதேச மாஸ்டர்களாக உள்ளனர். இந்த எண்ணிக்கையை முதற்கட்டமாக 59 ஆக அதிகரிக்கச் செய்யவேண்டும். இதுவே எங்களது முதல் இலக்கு. இவ்வாறு அவர் கூறினார்.

## 2036 ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த உரிமை கோருவோம்: பிரதமர் நரேந்திர மோடி அறிவிப்பு



**மும்பை:** 2036-ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த உரிமை கோருவோம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (ஐஓசி) கூட்டம் 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நேற்று நடைபெற்றது. இதற்கு முன்பு 1983-ல் ஐஓசி கூட்டம்

நடைபெற்றிருந்தது. மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் ஐஓசியின் 141-வது கூட்டம் பிரதமர் மோடி நேற்று முறைப்படி தொடங்குவதாக அறிவித்தார்.

பின்னர் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதில் இந்தியர்கள் மிகுந்த உற்சாகத்தில் உள்ளனர். 2036 ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கு இந்தியா உரிமை கோரும். இதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்தியா செய்யும். அதற்கு முன்னதாக 2029-ல் இளையோர் ஒலிம்பிக் போட்டியை நடத்த இந்தியா விரும்புகிறது. இதற்கான முன்னெடுப்புகளை இந்தியா செய்யும். இதற்காக ஐஓசி-யின் ஆதரவை இந்தியா நாடும்.

ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்துவது என்பது 140 கோடி இந்திய மக்களின் கனவு. நாட்டு மக்களின் கனவை நனவாக்க அனைவரின் ஆதரவுடன் நிறைவேற்ற விரும்புகிறோம். விளையாட்டின் உணர்வு என்பது உலகளாவிய விஷயமாகும். விளையாட்டில் தோல்வியாளர்களே கிடையாது. விளையாட்டில் வெற்றியாளர்கள், கற்றுக் கொள்பவர்கள் மட்டுமே உள்ளனர். விளையாட்டு மனித குலத்தை மேம்படுத்துகிறது. யார் சாதனைகளை முறியடித்தாலும், அனைவரும் அதை வரவேற்கின்றனர். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

ஐஓசி தலைவர் தாமக் பாக் பேசும்போது, “பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று வரும் இந்தியா, விளையாட்டிலும் நல்ல வளர்ச்சியை அடைந்து வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த ஒலிம்பிக் சமூகமும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய வீரர், வீராங்கனைகளின் செயல்திறனைப் பார்த்து பெருமைப்படலாம்" என்றார்.